DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC 110/2021

Prosecution witness – PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | : மகேஸ்வரி | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| **Taluk** | **:** | **Age:** | |

Accused absent. Petition filed u/s.317 Cr.P.C and allowed.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of _ 28.03.2024

முதல் விசாரணை:–

1. நான் மேலச்செல்வனூர் கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். எதிரியை தெரியும். இவ்வழக்கு சம்பவத்திற்கு 2 நாட்களுக்கு முன்பு ஊரில் ஒரு சின்ன பிரச்சனை நடந்தது அது சம்மந்தமாக 17.04.2020ந் தேதி காலை 08.00 மணியளவில் நானும், எங்கள் ஊரைச் சேர்ந்த நாகேஸ்வரி என்பவரும் எங்கள் ஊரில் உள்ள கரகத்தம்மன் கோவில் அருகில் பேசிக்கொண்டிருந்தோம்.

2. அப்போது குணசேகரன் வந்து என்னை தேவிடியா முண்ட, அசிங்கமாக பேசி மேலும் தரக்குறைவாக பேசினார். தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டார். நான் கீழே விழுந்ததில் எனக்கு மயக்கம் வந்தது. எனக்கு இடது காலில் அரைப்பு காயம் ஏற்பட்டது. எனக்கு லேசான காயம் என்பதால் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெறவில்லை.

3. கீழே விழுந்த என்னை எனது கணவரும், நாகேஸ்வரியும் வந்து பிடித்தார்கள். சம்பவ இடத்தில் நிறைய பேர் இருந்தார்கள். என்னையும் எனது கணவரையும் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார். எதிரி அங்கிருந்து சென்று விட்டார். நான் சம்பவம் குறித்து ஊரில் உள்ளவர்களிடம் பேசி முடித்துக்கொள்ளலாம் என்று சொன்னோம். ஊர்க்காரர்கள் அவரிடம் பேச மறுத்துவிட்டதால் மறுநாள் 18.04.2020ந் தேதி காலை 09.00 மணியளவில் கடலாடி காவல்நிலையம் சென்று குணசேகரன் மீது புகார் அளித்தேன். என்னிடம் புகார் மனு என்னால் கொடுக்கப்பட்டது. அந்த புகார் மனு அ.சா.ஆ.1

ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் போதுமான சந்தர்ப்பம் கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.